==============================================================

**Language in India** www.languageinindia.com **ISSN 1930-2940 Vol. 23:7 July 2023**

==============================================================


# Some Aspects of Tamil Language and Literature


**Meenakkanni Manikum**
**mmmanogaree@gmail.com**
**Mauritius**


==============================================================

I present here a research article based on my personal research and understanding of some aspects of Tamil Language and Literature. I am an integral member of Tamil migrants from Tamilnadu who migrated to Mauritius as indentured labour several generations ago. We continue to maintain our Tamil identity and engage ourselves in getting to know more about our mother tongue and its literatures of various sorts. We learn written Tamil in our schools and do our best to use it both as spoken and written Tamil. Our teachers encourage us to maintain our identity not only in our personal and religious life but also through speaking and writing Tamil.

The present article has four following major sections:

1. The purpose, aim and coverage of the information in this article. The type of research method adopted.

2. A description of the Tamil script, explain the possible meanings of the word Tamil, and continued use of the ancient language both as the written language and spoken language. The tendency and assertion of the independence and purity of the language. Resistance to accept script letters, etc.

3. Elaborate introduction to Tamil grammars, with focus on Tolkappiyam and how Tolkappiyam presents the linguistic and literary aspects of Tamil language and literature

.

## தமிழ் மொழியைப் பற்றி ஓர் ஆய்வு

பொருளடக்கம்

இயல் 1 : தலைப்பு

1.0 : முன்னுரை

1.1 : ஆய்வின் தலைப்பு விளக்கம்

1.2 : ஆய்வின் நோக்கம்

1.3 : ஆய்வின் எல்லை

1.4 : ஆய்வின் ஆதாரங்கள்

1.5 : ஆய்வின் இயல் அமைப்பு

இயல் 2

2.0 : முன்னுரை

2.1 : தமிழ்ச் சொல்

2.2 : தமிழ் மொழி

2.3 : தமிழின் வரிவடிவம்

2.4 : தமிழ் எழுத்துக்கள்

2.5 : சொற்பாகுபாடு

2.6 : தமிழின் பொருள்

2.7 : தமிழ் மொழியின் தொன்மை

2.8 : முடிவுரை

இயல் 3

3.0 : முன்னுரை

3.1 : தொல்காப்பியம்

3.2 : காலம்

3.3 : சிறப்பும் பெருமையும்

3.4 : தொல்காப்பியத்தின் அமைப்பு

3.4.1 : எழுத்ததிகாரம்

3.4.2 : சொல்லதிகாரம்

3.4.2.1: வேற்றுமை மயங்கியல்

3.4.2.2: விளி மரபு

3.4.2.3: பெயரியல்

3.4.2.4: வினைச்சொற்கள்

3.4.2.5: வினையியல்

3.4.2.6: இடைச்சொற்கள்

3.4.2.7: அடிச்சொற்கள்

3.4.2.8: எச்சவியல்

3.5 : பொருளதிகாரம்

3.5.1 : அகத்திணை

3.5.2 : முதல்பொருள்

3.5.3 : நிலம்

3.5.4 : காலம்

3.5.5 : கருப்பொருள்

3.5.6 : உரிப்பொருள்

3.5.7 : புறத்திணை

3.5.8 : களவியல்

3.5.9 : பண்புகள்

3.5.10: பொருளியல்

3.5.11: மெய்ப்பாடு

3.6 : முடிவுரை

இயல் 4

4.0 : முடிவுரை

: மேற்பார்வை நூற்கள்

தமிழ் மொழியைப் பற்றி ஓர் ஆய்வு

## 1.0 ***முன்னுரை***

தமிழக வரலாற்றை அறிய சான்றுகள் காலவாரியாகவும் சான்றுகள் வாரியாகவும் என்று நோக்கி அறியப்படுகிறது. காலமாகப் பகுப்போர் அதனை வரலாற்றுக்கு முற்பட்ட காலம், சங்க காலம், பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், இன்றைய காலம் முறைப்படுத்தினர். "சிந்துவெளி நாகரிகம் தமிழக வரலாற்றுடன் தொடர்பு படுத்திப் பார்க்கப்பட்டபின் தமிழ் நாகரிகத்தின் பழமை புதிய கோணத்தில் ஆராயப்படுகிறது." [1] சண்முகத்தைப் பார்த்து வேறு எந்த உயிரையும் கொல்ல அவசியம் இல்லை என்று சொன்னது இனித்தமிழ் மொழி. அகத்தை விட்டு புறத்தை மட்டும் பார்த்து அழித்தது தமிழ் மொழி. ஆதலால், சற்று உள் உணர்ச்சியே தமிழே ஆகியது. இரும்புக்காலக் கருவிகள் ஆதிச்சநல்லூர், கரடியூர், கோயம்புத்தூர், தலைச்சேரி, பிரமகிரி, பெரம்பூர், போடிநாயக்கனூர், மந்தம்பாடி, மோகனூர், வல்லம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழ் வரலாற்றை அறியத் துணைநிற்கும் நோக்க அடிப்படையில் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் இரு வகைப்படுத்தலாம். அவை சமுதாயப் பின்னணியை மையமாகக் கொண்டு படைக்கப்படுபவை மற்றும் அரசியல் பின்னணியை மையமாகக் கொண்டு படைக்கப்படுபவை. இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் காலமும் நிகழ்ச்சியும் நுட்பமான அல்லது

தெளிவான முறையில் தொடர்புபடுத்திக் காட்டப்படும் வாய்ப்பு இல்லை. அம்முறையில் அவை நிரல்படத் தொகுக்கவும் படவில்லை. கற்கால மனிதச் சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பல்லாவரத்தில் சிற்பங்கள் செய்யும் மரபும் திறனும் அக்காலத்தில் இருந்தமையை இது உணர்த்துகிறது எனலாம்.

## *1.1 ஆய்வின் தலைப்பு விளக்கம்*

தமிழ் மொழி கர்நாடக மொழிகளில் ஒன்றாகும். சிறப்பான தாலாட்டை அடைந்தவுடன் தமிழ் மொழி குழந்தைக்கு இனிமையாகத்தான் இருக்கிறது. "ஜாதி மதங்களைப் பாரோம்" இந்த மொழியாலே.

" வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க! [2]

என்று வாழிய செந்தமிழ் ஆசிரியப்பாவில் வருகின்றது. தமிழின் விடுதலை இன்று கூட கிடைக்கவில்லை. இருந்தும் "இழிவு கொண்ட மனித ரென்பது இந்தி யாவில் இல்லையே;" என்றார் பாரதியார். மேலும் அல்லது இன்றும்; இழிவு கொண்ட...மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை

யைக்கோ ளுத்துவோம்;" என்றும் "பாரத நாடு பார்க்கெலாம் திலகம்;" என்றார் பாரதியார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்."

என்று கூறி பாரதியார் தமிழ் மொழியின் புகழ்ச்சியினைப் பாதுகாத்து விவரிக்கின்றார். நெஞ்சம் துதிக்கிறது. இந்த மொழியைக் கேட்கும்போது வயிற்றில் உயிரில்லா சாப்பாடு போல தோற்றம் அடைகிறது. தேன் போல் நுரையீரலுக்கு எங்ஙனம் சுவையான அமைதியைத் தருகின்றதைப் போன்றே தமிழ் மொழியே. கேட்கும்போது உலகில் உள்ள மொழிகள் எல்லாத்துள் தமிழ் மொழியும் இனிமையாக இருக்கிறது. கூட சொல்லி தமிழ் மொழி சிறப்பே என்றும் சொல்லலாம். அன்னைத் தமிழ்ப் பவானி போலேதான் இருக்கிறாள். "நிர்மல முனிவரும் நிறைந்தநன் னாடு!" என்றார் கவிமணி தேசிகனான பாரதியார்.

### *1.2 ஆய்வின் நோக்கம்*

இந்த ஆராய்ச்சியின் பெருநோக்கம் என்பது தமிழ் இலக்கியம் புராதனப் பெருமையுடையது. பல ஆண்டுகளாக முன்னேறி வந்து; வந்த தமிழ் இலக்கியங்களை முழுதும் "தமிழிலியக்கியம்" தான் எனப் பொதுவாக வழங்கல் ஆயிற்று எனலாம். ஆனால், கூர்மையாக நோக்கும்போது நீண்ட காலமாகப் பரிணமித்து வந்துள்ள இலக்கியங்களைக் கால அடிப்படையில் தனிமையிலும் சிறந்து நல்ல பண்புகளையும் கொண்டு

வேறுபாடுகளையும் அடைந்துகொண்டு காணப்படுகிறது. இந்தத் தமிழ் மொழி "இலக்கியம் தேர்வுக்குரிய ஒரு பாடமாகவும் உள்ளது என்னும் அடிப்படை உண்மையை மறக்கவியலாது" என்றார் க.கைலாசபதி அவர்கள். அறிவியலைக் கொண்டு தமிழ் மொழியை நன்றாக வளர்த்துக் கொள்ள முடியும் என்றனர் தமிழர்கள் அனைவரும். இந்த உக-ஆம் நூற்றாண்டில் செம்மொழி செழிந்தது. வாழ்க மொழியே. வாழ்க தமிழ் மொழியும்.

### ***1.3 ஆய்வின் எல்லை***

ஆய்வாளர்கள் எழுதிய நூலகத்தின் புத்தகங்களையும் அறிக்கைகளையும் கொண்டு இவ்வாய்வின் எல்லையாகக் கொள்ளப்படுகிறது.

### ***1.4 ஆய்வின் ஆதாரங்கள்***

இவ்வாய்வின் அணுகுமுறைகள் என்பவை:

-வரலாற்று அறிக்கைகளும் புத்தகங்களும்.

### ***1.5 ஆய்வின் இயல் அமைப்பு***

'தமிழ் மொழியைப் பற்றி ஓர் ஆய்வு' என்னும் தலைப்பைத் தவிர இந்த ஆராய்ச்சி ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது.

## தமிழ் மொழியைப் பற்றி ஓர் ஆய்வு

**இயல் 1:**

முதலாவது இயல் ஆய்வின் முன்னுரையும் ஆய்வின் தலைப்பு விளக்கமும் ஆய்வின் நோக்கமும் ஆய்வின் எல்லையும் ஆய்வின் ஆதாரங்களும் ஆய்வின் இயல் அமைப்பும் கொண்டுள்ளது.

***இயல் 2:***

இரண்டாவது இயல் தமிழ்ச்சொல், தமிழ் மொழி, தமிழின் வரிவடிவம், தமிழ் எழுத்துக்கள், சொற்பாகுபாடு, தமிழின் பொருள், தமிழ் மொழியின் தொன்மை ஆகியவைக் கொண்டுள்ளது.

***இயல் 3:***

இயல் மூன்று என்பது தொல்காப்பியம், அதன் காலம், அதன் சிறப்பும் பெருமையும், அதன் அமைப்பு, எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், வேற்றுமை மயங்கியல், விளி மரபு, பெயரியல், வினைச்சொற்கள், வினையியல், இடைச்சொற்கள், அடிச்சொற்கள், எச்சவியல், பொருளதிகாரம் போன்றவைப் பற்றியது.

**இயல் 2:**

***2.0 முன்னுரை***

அகன்றும் உலகம் என் மேல் வைத்தோர் கடவுள். கடவுள் தான் தமிழ் மொழியைக் காப்பாற்றுக் கொண்டே இருக்கிறது. வீர சோழியம் மற்றும் சோழ வமிசம் போன்ற நூல்களைப் படிக்கும்போது கடினமான தமிழ்த்தான் தெரிகிறது. எனினும், தமிழ் மொழியே சிறப்பு என்று சொல்கிறது. "கல் தோன்றா காலத்தே" தமிழ் மொழி தோன்றி இருக்க வேண்டும் என்று வீர சோழியம் என்னும் நூலால் தெரிகிறது. பாரதியாரும் சொன்னார் என்பது "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்." ஆகையால் வாசவன் என்பவன் ஒருவனும் தமிழ் மொழியைப் பற்றி எழுத ஆரம்பித்த போது அக்கினிக் குஞ்சு எழுதினார். ஒப்பற்ற இரு குலங்களும் நிலைபெற வந்து, ஒரு தனி குடைக்கீழ், நான்கு கடல்களையும் நான்கு திக்குகளையும் தனக்கே உரிமையாக பெற்றிருக்கின்ற, சூரிய குலத்திற் சிறந்தவனான முதற்குலோத்துங்க தமிழே வாழ்க தமிழ்க்கடவுளான முருகன் பன்னிரண்டு கைகளும் பன்னிரண்டு கண்களும் பெற்றிருப்பது போலக் குலோத்துங்கனும், நான்கு கடல்களையும், நான்கு திக்குகளையும் தனக்கே உரிமையாகப் பெற்றிருக்கின்ற, சூரிய குலத்திற் சிறந்தவனான முதற்குலோத்துங்க தமிழே வாழ்க. தமிழ்க்கடவுளான முருகன் பன்னிரண்டு கைகளும் பன்னிரண்டு கண்களும் பெற்றிருப்பது போலக் குலோத்துங்க நான்கு கடல்களையும், நான்கு திக்குகளையும் தனக்குப்

பொன் இரண்டு படைத்த மொழியாகும். எட்டுத்திக்கு யானைகளும் எட்டுத் தூண்களாக வெற்றித் தூண்கள் பலவற்றை நாட்டி, ஒப்பற்ற வானத்தைக் கூரையாகக் கொண்டு இருப்பதைப் போல, உலகங்களை எல்லாம் வென்ற மொழியே தமிழ் மொழி.1

## *2.1 தமிழ்ச் சொல்*

"தமிழ்" என்னும் சொல், தமிழில் கிடைத்துள்ள முதல் நூலாகிய தொல்காப்பியத்தில் காணப்பெறுகிறது. "தமிழ் என் கிளவியும் அதனோ ரற்றே"" (தொல்: 385) என்பது நூற்பா. மேலும், தமிழ் என்ற சொல் வல்லெழுத்து மிக்கு முடிதலோடு அக்குச் சாரியையும் பெற்று வரும். தமிழக்கூத்து, தமிழச்சாதி என்பன சான்றுகள். இது மட்டுமின்றி தமிழ் என்ற சொல் (பதம்) தொல்காப்பியத்தில் (135) நூற்றுமுப்பத்தைந்து இடங்களில் பயன்பெறுகிறது. 'தமிழ்' என்னும் சொல் (பதம்)-இல் த் - வல்லினம், ம் - மெல்லினம், ழ் - இடையினம் என மூன்று இனங்களும் உள்ளன.

## *2.2 தமிழ் மொழி*

தமிழ் மொழி திராவிட மொழிகளின் தாய் (மூலம்) என்பது மேல்நாட்டு மொழியறிஞராகிய கால்டுவெல் அவர்களது கருத்தாகும். தற்போது இந்தியாவில் இரண்டு பெரும் பண்பாடுகள் உள்ளன. அவை, திராவிட பண்பாடும் ஆரிய பண்பாடும் ஆகும். தென்பகுதிகளில் திராவிட

பண்பாடும் மொழிகளும் பரவியுள்ளன. தென்மொழிகள் என்பவை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலியவை ஆகும். இம்மொழிகள் தமிழ் மொழியின் அடிப்படையானவை என்பது பொதுக் கருத்து. உலக மொழிகளில் இன்று பழமையானது என்று கருதப்பெறும் மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். தமிழ் மொழி பக்தி மொழியாய் திகழ்கின்றது. " யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்; இனிதாவது எங்கும் காணோம்" என்றார் பாரதியார் அவர்கள். இலத்தீன், கிரீக், சமஸ்கிருதம் போன்ற பழமையான மொழிகளுள் தமிழ் மொழி மட்டுந்தான் இன்றும் உயிருள்ள, வழக்கிலுள்ள மொழியா க உள்ளது. தமிழ் என்ற சொல்தான் தமிள, த்ரமிள, த்ரமிடா, த்ரபிடா, திரவிடா எனப் பிறமொழியாளர்களால் அழைக்கப்பட்டது என்பது மொழியியலாளர்களின் கருத்து. பழங்காலத்தில் தமிழ் மொழி சமஸ்கிருதத்திலிருந்துதான் பல சொற்களைக் கடனாக வாங்கியது என்ற எண்ணம் இருந்தது. ஆனால் பரோவும் எமனோவும் (BURROW, EMENAU) 'Dravidian loans in Sanskrit' என்ற நூலை எழுதியபின்பு அவ்வெண்ணம் மாற்றம் அடைந்து 'திராவிட மொழிகளின் அடிச்சொல் அல்லது வேர்ச்சொல் அகராதியை இயற்றி தமிழ்மொழியின் சிறப்பினை உலகிற்கு உணர்த்தினர். (A Dravidian Etymological Dictionary) வரிவடிவத்தைப் பெறும் மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும்.

## ***2.3. தமிழின் வரிவடிவம்***

ஒரு மொழி வரிவடிவத்தைப் பெறுவதற்குப் பல நூற்றாண்டுகள் ஆகின்றன. தமிழ் மொழி கி.மு ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்பே வரிவடிவம் பெற்ற மொழி ஆகும். அதைத் தொல்காப்பியம் கூறுகிறது. " உட்பெறு புள்ளி உருவா கும்மே"-(தொல்: 14), "மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" (தொல்:15), "எகர ஒகரத்து இயற்கையும் அற்றே" (தொல்:16). இந்த மூன்று நூற்பாக்களும் வரிவடிவத்தைப் பற்றி கூறுகின்றன. தொல்காப்பியர் காலத்தில் எ, ஒ புள்ளி கொண்டு இருந்தால் குறில், புள்ளி கொள்ளாமல் இருந்தால் நெடில். ஆனால் எ, ஒ என்னும் வரிவடிவம் காலந்தோறும் மாற்றம் அடைந்துள்ளன. கல்வெட்டுக்கள் தோன்றிய பின்புதான் மாற்றங்கள் குறைந்தன. தமிழ் மொழிக்கு மட்டும் வடமொழியில் இல்லாத ஐந்து எழுத்துக்கள் எ, ஒ, ற, ன, ழ என்பன. சமஸ்கிருதத்தை விட தமிழ் மொழிக்கு அதிக வரிவடிவங்கள் உள்ளன. ஆக, சமஸ்கிருதத்திற்கு முன்பு தமிழ் தோன்றியது என்பது சான்றாகும். மெல்லொலிகள் தமிழுக்கு மட்டும்தான் ஆறு வடிவங்கள் உண்டு. சமஸ்கிருதத்திற்கு ஐந்து. சில மொழிகளுக்கு மூன்று, நான்கு மெல்லொலி வடிவங்கள் உண்டு. மற்ற மொழிகளை விட தமிழுக்கு 'ன' என்னும் மெல்லொலி வரிவடிவம் மிகுதி என்பர். அது ஆண்பாலைக் குறிக்கிறது/சுட்டுகிறது.

தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற திராவிட மொழிகள் சமஸ்கிருதத்தில் உள்ள வர்க்க எழுத்துக்களைக் கடன் வாங்கி ஒலிக்கின்றன. சான்றாக: வர்க்க எழுத்துக்கள் என்பவை நான்கு க, நான்கு த, நான்கு ப, நான்கு ட ஆகும். ஆனால் தமிழுக்கு மட்டும் கடன் வாங்காமல் இன்று வரை வர்க்க எழுத்துக்கள் இல்லாமல் ஒரு க, ஒரு த, ஒரு ப, ஒரு ட கொண்டு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறாக ஒலிக்கின்றன. இது தமிழ் மொழியின் ஒலிவடிவத்தைச் சிறப்பிக்கின்றது.

எடுத்துக்காட்டாக: அழகன்- க='ga' வாக ஒலிக்கும்/ -:கந்தன்- க='ka' வாக ஒலிக்கும்.

ஆங்கிலத்தில் 'c' என்னும் எழுத்து தனியாக இருக்கும்போது 'சி' என்று ஒலிக்கும். ஆனால், 'cat':- ket-ஆக மற்றும் 'cot' : At-ஆக ஒலிக்கும். அதாவது ஒலி இயல்பு திரியும். ஆனால் தமிழ் எழுத்துக்களது ஒலி இயல்பு திரியாது. அதை " மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்துவேறு இசைப்பினும்-எழுத்துஇயல் திரியா என்மனார் புலவர்." என்னும் நூற்பாவில் (தொல்: 53) தொல்காப்பியம் கூறுகிறது.

### *2.4. தமிழ் எழுத்துக்கள்*

பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பிராமி எழுத்திலும் வட்டெழுத்திலும், கிரந்த எழுத்திலும் உள்ளன. ஆனால், இன்றைய தமிழ் எழுத்துக்கள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகு ஏற்பட்ட கல்வெட்டுக்களில் உள்ளன. தமிழில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. அவை குறில், நெடில் என்று இரண்டாக வகைப்படும். அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்துக்கள் அ+இ=ஐ வான நெடில் எழுத்து. மற்றும் அ+உ=ஔ வான நெடில் எழுத்து. ஆக, மொத்தம் நெடில் எழுத்துக்கள் ஏழு ஆகும்.

மெய் எழுத்துக்கள் 'க' கரம் முதல் 'ன' கரம் வரை பதினெட்டு ஆகும். அவற்றுள் க,ச,ட,த,ப,ற என்னும் ஆறு வல்லின எழுத்துக்கள். ங, ஞ, ண, ந, ம, ன எனும் ஆறும் மெல்லின எழுத்துக்கள். ய, ர, ல, வ, ழ, ள எனும் ஆறும் இடையின எழுத்துக்கள். வல்லினம் முதலில் தோன்றின என்றும் இடையினங்கள் மெல்லினத்துக்கு முன் தோன்றின என்பதும் மொழியியலாளரின் கருத்து. ஆய்த எழுத்து ஃ என்னும் வடிவில் உள்ளது.

### *2.5. சொற்பாகுபாடு*

தமிழ்ச் சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும். தமிழ்ச் சொற்கள் ஒழுக்கத்தின் அடிப்படையாக விளங்குகின்றன. உயர்ந்த ஒழுக்கங்களை உடையவர்கள் உயர்திணையாக, குறைந்த அல்லது தாழ்ந்த ஒழுக்கங்களை உடையவர்கள் அல்திணை அல்லது அஃறிணை என்னும் வகைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அஃறிணைகள் ஓரறிவு முதல் ஐயறிவு வரையாகவும் வகுக்கப்பட்டுள்ளன. மேலும்,

அடிச்சொற்கள் உரிச்சொற்களாகத் தெரியப்படுகின்றன. பொருளின் பெயரை உணர்த்துபவை பெயர்ச்சொற்கள் செய்யும் தொழிலை உணர்த்துபவை வினைச்சொற்கள் வாக்கியத்தை அமைப்பதற்குப் பயன்படுபவை இடைச்சொற்கள். இச்சொற்பாகுபாடு உலக மொழிகள் அனைத்திற்கும் உள்ள பொதுப்பாகுபாட்டை ஒட்டியே அமைந்துள்ளது.

## *2.6. தமிழின் பொருள்*

தமிழ் என்னும் சொல் தமிழ் நாடு, தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ் மக்கள், தமிழரசர் போன்ற பொருள்களைத் தந்துள்ளது.

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்பது பிங்கல நிகண்டு கூறும் பொருள் ஆகும். சங்கம் மருவிய காலத்தில் தமிழுக்குத் தன் மதிப்புக் குறைந்தது ஏனென்றால் அக்காலத்தில் களப்பிரர், பல்லவர்கள், தமிழ் நாட்டுக்கு வந்து ஆட்சிபுரிந்தனர். அப்போது சமஸ்கிருதச் செல்வாக்குத் தான் இருந்தது. தமிழ்ச்சிசுவான திருஞானசம்பந்தரால்தான் தமிழுக்கு மறுமலர்ச்சி ஏற்பட்டது.

## *2.7. தமிழ் மொழியின் தொன்மை*

தொல்காப்பியம் கி.முவில் தோன்றிய நூல் என்பதில் ஐயம் இல்லை. தொல்காப்பியம் போன்று ஓர் இலக்கண நூல் தமிழ் மொழிக்குத் தோன்றுவதாக இருந்தால் குறைந்தது கி.மு. ஐந்து ஆயிரம்

ஆண்டுகளுக்கு முன்பு இம்மொழி தோன்றியிருக்க வேண்டும். பின்புதான் அம்மொழிக்கு வரிவடிவங்கள் தோன்ற முடியும். இலக்கியங்கள் தோன்றியிருக்கும். இலக்கியங்களின் அடிப்படையில்தான் இலக்கணம் தோன்ற முடியும்.

### *2.8 முடிவிரை*

இத்தனை ஆண்டுகளாக இருப்பது நமது வாழ்க்கையில் இயற்கைச் சீற்றலாலும் (சீற்றத்தாலும்) வன்முறைகளாலும் மனிதன் அழிந்து போனதுதான் கொண்டே இருக்கிறான். சரியில்லாத சமுதாயத்தில்தான் வாழ்கிறோம் என்று சிலர் சொல்கின்றனர். கடல்கோள்களால் குமரிகண்டமும் மற்ற நாடுகளும் கடலில் மூழ்கின. நமது கோவில்களும் நீரில் மூழ்கி வழிபடப்படுகின்றன. வாழ்க தமிழ் மொழி. வாழ்க வளமுடன் தமிழ்ச் சமுதாயம். எண்ணற்ற வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையுள் தெய்வத்துள் தெய்வத்துள்ளம் செல்வம். தெய்வம் என்றனர் சென்னை தமிழ் மக்கள். பல நாட்களாக மக்கள் பலர் தங்கள் ஆரோக்கியங்களைப் பற்றி யோசிக்கிறார்கள். உடல்நலம் சரியில்லாமல் இருக்கும்போதுதான் உடல்நலத்தைப் பற்றி ஆரோக்கிய சிந்தனை வரும். ஒவ்வொருவருக்கும் ஒரு சிலவற்றான நோய் உண்டு. சிறுதுளிமையங்கள் மிகவும் குறுகியவையானவை. இவையை அல்லது இவற்றைப் பார்ப்பதற்கு மைக்கரோஸ்கோப்பு -அப்புறமாதம் கருவி மூலம்தான் முடியும். அதே போல உலகத்தையும் வானத்திலிருந்து

பார்க்க முடியும். இயற்கைச் சீற்றங்களால் அழியப்பட்ட உலகத்தில் வாழ்ந்த மக்களை இதன் மூலம்தான் அல்லது வாயிலாகப் பார்க்க முடியும், அல்லது இயலும்.[2]

## இயல் 3

### *3.0. முன்னுரை*

தமிழில் இருந்த மிகப்பெருமையான தொன்மையில் கிடந்த இலக்கண நூல்கள் என்பன தொல்காப்பியமும் அதன் மூலம் வீரசோழியமும் ஆகும். தொல்காப்பியமாகக் கிடைத்து உள்ள நூல்கள் மூன்று ஆகும். ஒவ்வொரு நூலும் ஒன்பது இயல்கள் கொண்டுள்ளன. சூத்திரங்கள் மொத்தத்தில் 1,610 (483+463+664) என்பர். தொல்காப்பியத்தைப் பற்றி நிலவியலின் மூலமாகக் கூட பலவாறான செய்திகள் பெறவில்லை என்றனர் ஆய்வாளர்களான கே.கே பிள்ளை, அ.ஜெயமும் அவர்கள். ஐயா நடராஜா தேவபூபதியின்படி தொல்காப்பியத்தின் முதல் பாடம் கி.மு.உ.க நூற்றாண்டுக்கு முன் காலத்தியது. [1]

### *3.1. தொல்காப்பியம்*

தொல்காப்பியம் தமிழ் மொழி, தமிழ் இலக்கியங்களைப் பற்றிக் கூறும் செம்மையான, தெளிவான இலக்கண நூல். தொல்காப்பிய பொருளதிகாரம் பொது நிலையில் இலக்கியம் பற்றி பேசுகிறது. செய்யுளியல் என்ற இயல் முழுவதும் தமிழ் இலக்கியத்தின்

இலக்கணம். செய்யுள் என்ற சொல்லால் தொல்காப்பியக் காலத்தோர் இலக்கியத்தைக் குறித்தனர். தொல்காப்பியச் செய்யுளியல் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு இருந்த தமிழ் இலக்கியத்தின் பிழிவு, செய்யுளியல் இலக்கிய வகைகள், இலக்கிய மரபு, இலக்கியக் கொள்கை, இலக்கியத் திறனாய்வு அனைத்தையும் கூறுகிறது. தொல்காப்பிய காலத்திற்கு முந்தியோர் இலக்கிய வகைகளை ஏழாகப் பகுத்தனர்.

"***பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,***

***அங்கதம், முதுசொல்லொடு, அவ்வேழ் நிலத்தும்***

***...............................................................................................***

***...............................................................................................***

***யாப்பின் வழியது என்மனார் புலவர்.***"

தமிழில் இன்று கிடைக்கின்ற நூல்களுள் முதல் நூல் என்பது தொல்காப்பியம். அது எழுத்து, சொல், பொருள் என்ற முப்பொருள்களைக் கூறுகிறது. வேறு பெயர்-உலகப்பொது நூல். அது உலகத் தோற்றம், உயிர்களின் வகைப்பாடு, உயிர்களைப் பற்றிய பகுப்பாய்வு, உயிர்களின் இளமை, முதுமைப்பெயர்கள் போன்றவற்றைக் கூறுகிறது. உலகப் பொருள்களை முதல்,கரு,உரி என்று முப்பிரிவாகப் பிரித்து விளக்கம் தருகிறது. இது மொழி இலக்கண நூல் மட்டுமன்று. வாழ்வின் இலக்கணத்தையும் வகுத்துக் கூறும் நூல். வாழ்க்கைக்குத் தேவையான பண்புகள், தேவையற்ற தீக்குணங்கள் போன்றவற்றை எல்லாம் தெளிவாகப் பேசும் நூல்.

பெயர்:தொல்காப்பியம் சேர்த்தும், வகுத்தும், தொகுத்தும் எழுதப்பெற்ற நூலாகும்.

தொல்காப்பியம்=தொல்+காப்பு+இயம்

தொல்காப்பியம் என்ற பெயர் பழமையைக் காத்து இயம்பும் நூல் என்ற பொருளைக் கொண்டுள்ளது.

***3.2. காலம்:***

சங்க இலக்கியங்கள், திருக்குறள் போன்றவற்றில் தொல்காப்பியக் கருத்துக்கள் உள்ளன. சொற்களும் உள்ளன. ஆக, அவற்றிற்கு முன்பு தொல்காப்பியம் தோன்றியது என்பதில் ஐயமில்லை. தொல்காப்பிய காலத்தை கி.மு. மூவாயிரம் என்றும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கூறுவோர் உண்டு. தமிழகத்தில் ஏற்பட்ட கடல்கோள்கள் வரலாற்று உண்மை. இரண்டாம் சங்கம் கபாடபுரத்தில் இருந்தது என்பது பொது எண்ணம். இக்காலத்தில்தான் தொல்காப்பியம் தோன்றியிருக்க வேண்டும்.

***"வேறு தக்க சான்றுகள் இடைக்கும் வரையில் தொல்காப்பியர் கி.மு. 4ஆம் நூற்றாண்டினர் என்று கருதுதல் தகும்."***

என்று டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் கருத்தாகும்.

### 3.3. சிறப்பும் பெருமையும் (தொல்காப்பியம்)

தொல்காப்பியத்திற்கு இதுவரை 150 பதிப்புகளுக்கு மேல் வந்துள்ளன. உலகம் முழுவதும் தொல்காப்பியச் சுவடிகள் 133-க்கு மேல் உள்ளன. தொல்காப்பியத்திற்கு பல உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர். தொல்காப்பியத்திற்குச் சுவடிவேறுபாடுகள் 2000-த்திற்கு மேல் உள்ளன. தொல்காப்பியத்திற்கு எழுவர் உரை எழுதியுள்ளனர். ஏழு உரைகளும் கிடைக்கின்றன. தொல்காப்பியம் முழுவதற்கும் உரை எழுதியவர் இளம்பூரணர். தொல்காப்பியத்திற்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் உரை வளங்கள் வெளியிட்டுள்ளன. திருக்குறள் போன்று தொல்காப்பியம் கற்றோரிடையே மிகுதியான பயிற்சியில் உள்ளது.

### *3.4. தொல்காப்பியத்தின் அமைப்பு*

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையுடையது. ஒவ்வொரு அதிகாரமும் 9 இயல்களைக் கொண்டுள்ளது. மொத்தம் 27 இயல்கள். தொல்காப்பியத்திற்கு

உரையாசிரியர்களின் எண்ணங்களுக்குத் தக நூற்பாக்கள் கொண்டுள்ளன. அனைத்திற்கும் பொருள்தான் அடிப்படை. பொருளைப் பற்றிப் பேசுவதற்குச் சொற்கள் தேவைப்படுகின்றன. சொற்கள் எழுத்துக்களால் ஆயவை. அதனால் பொருளடிப்படையில் பொருள், சொல், எழுத்து என்ற நிலையில்தான் அதிகாரங்கள் அமைத்திருத்தல் வேண்டும். எளிமை கருதி எழுத்து, சொல், பொருள் எனத் தொல்காப்பியர் தொல்காப்பியத்தை அமைந்துள்ளார் என தெரிகிறது.

### 3.4.1. எழுத்ததிகாரம்

எழுத்ததிகாரம் 9 இயல்களைக் கொண்டுள்ளது. அவை: நூன்மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல் உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல். தமிழ் எழுத்துக்கள் 30. குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற மூன்றும் சார்ந்து வரும் எழுத்துக்கள். எழுத்துக்களின் ஒலி அளவு 1/4,1/2,1,2 ஆகிய மாத்திரைகளில் அமையும். உயிர் எழுத்துக்கள் 12. மெய் எழுத்துக்கள் 18. குறில் 5. நெடில் 7. வல்லினம்-6, மெல்லினம்-6, இடையினம்-6. முன் காலத்தில் மெய் எழுத்துக்களோடு எ, ஒ குறில்களும் புள்ளிகள் பெறும்.

பிறப்பியல் எழுத்துக்கள் பிறக்கும் வகைகளைக் கூறுகிறது. உந்தியிலிருந்து காற்று மேலே வந்து தலை, மிடறு, நெஞ்சு, இவற்றில் நின்று பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் இவற்றின் வழி

வெளிப்படும்போது ஒலி எழுத்துக்கள் பிறக்கின்றன. புணரியல் பொது நிலையில், சொல்லின் இறுதியில் நிற்கும் எழுத்தும், வரும் சொல்லில் முதலில் வரும் எழுத்தும், சேரும்போது ஏற்படும் மாற்றங்களைக் கூறுகிறது.

எழுத்துக்கள் சேரும்போது மெய் பிறிது ஆகலாம், மிகலாம், குறையலாம். இவற்றைப் பேசுகிறது புணரியல். வேற்றுமை உருபுகள் பெயர்களோடு சேரும்போது ஏற்படும் உற்மாற்றங்களைக் கூறுவது உருபியல்.

உயிர் எழுத்துக்கள் வரும் சொற்களோடு சேரும் நிலைபற்றிப் பேசுவது உயிர் மயங்கியல். மெய்யெழுத்துக்கள் வரும் சொற்களோடு சேரும்போது ஏற்படும் மாற்றங்கள் பற்றிக் கூறுவது புள்ளி மயங்கியல். குற்றியலுகரமுடைய நிலைமொழிச் சொற்கள் வரும் சொற்களோடு இணையும்போது ஏற்படும் வேறுபாடுகளைக் கூறுவது குற்றியலுகரப்புணரியல்.

### 3.4.2. சொல்லதிகாரம்

1.கிளவியாக்கம் 2. வேற்றுமையியல் 3. வேற்றுமை மயங்கியல் 4. விளிமரபு 5. பெயரியல் 6. வினையியல் 7. இடையியல் 8. உயிரியல் 9. எச்சவியல் என்பன சொல்லதிகாரத்தின் ஒன்பது (9) இயல்கள்.

கிளவி என்பது சொல்லைக் குறிக்கும். எவ்வாறு சொற்களை ஆக்கிக் கொள்வது என்பதைக் கூறும் இயல் கிளவியாக்கம்.

1. உயர்திணை-உயர்ந்த ஒழுக்கம் உடையவர்
2. அஃறிணை- உயர்வு அல்லாத ஒழுக்கமுடையன.

இவ்விரு ஒழுக்கமுடையவரைப் பற்றிப் பேசுவன சொற்கள்.

-ஒட்டு மொழி குடும்பம்: 'ன்' ஒற்று ஆண்பால் ஒருமையைக் குறிக்கும். "ர்" ஒற்று பலர்பாலைக் குறிக்கும்.

பகர இறுதியும் மார் என்ற சொல்லும் பலர்பாலைக் குறிக்கும். 1) செயற்கைப் பொருளைக் கூறும்போது காரணத்தோடு கூற வேண்டும். சொற்கள் மயங்காமல் பேச வேண்டும். இயற்பெயரைக் கூறிய பின்பு சுட்டுப்பெயரைக் கூற வேண்டும். இவ்வாறு சொற்களைப் ப்யங்கொள்ளும் முறையைப்பற்றிக் கிளவியாக்கம் கூறுகிறது. வேற்றுமை உருபுகள் பொருள்களை வேற்றுமைப்படுத்துகின்றன. வேற்றுமைகள் எட்டு. அவை: 1. எழுவாய் 2. ஐ 3. ஒடு 4.கு 5.இன் 6. அது 7.கண் 8. விளி

ஒவ்வொரு வேற்றுமை உருபும் என்னென்ன பொருளில் வரும் என்பதைக் கூறுவது வேற்றுமையியல்.

### 3.4.2.1. வேற்றுமை மயங்கியல்

பொருளும், உருபுகளும் மயங்கி வரலாம். சில நிலைகள் அவ்வாறு வரும் வாய்ப்பு உண்டு. அவ்வாறு வரும் நிலைகள் என்னென்ன என்பதைக் கூறுவது வேற்றுமை மயங்கியல்.

### 3.4.2.2. விளி மரபு

எட்டாம் வேற்றுமை விளித்தல், அல்லது அழைத்தலின் பாற்படும். அவ்வாறு விளி கொள்ளும் பெயர்கள் எவை? அவைகளின் தன்மை என்ன என்பதை விளக்குவது விளிமரபு.

### 3.4.2.3. பெயரியல்

பெயர்ச்சொல்லின் வகைகள், உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் போன்றவற்றை விளக்குகிறார் தொல்காப்பியர். இயற்பெயர், சினைப்பெயர், முறைப்பெயர், தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள் பற்றியும் பேசுவது பெயரியல்.

### 3.4.2.4. வினைச்சொற்கள்

செயலை உணர்த்துபவையும் காலம் காட்டுபவையும் வினைச்சொற்கள். தெரிநிலைவினை, குறிப்புவினை இருவகைகள்.

### 3.4.2.5. வினையியல்

வினைமுற்றுக்களின் அமைப்புக்கள்; விரவுவினைகள், வினைச்சொல்லின் வழித்தோன்றும் பெயரெச்சம், வினையெச்சங்கள், செயப்படுபொருள் போன்றவற்றைக் கூறுவது வினையியல்.

### 3.4.2.6. இடைச்சொற்கள்

இடைச்சொற்கள் புணர்ச்சியில் சாரியைகளாக வரும். காலம்காட்டும். இடைநிலைகளாக வரும். வேற்றுமைப்பொருளைத் தரும். உருபுகளாக வரும். அசைநிலை, இசைநிறைகளாக வரும். தத்தம் குறிப்பால் பொருள் தரும். ஒப்புமைப்படுத்தும். உருபுகளாக வரும்.

இவ்வாறு வரும் இடைச்சொற்கள் பற்றி விளக்குகிறது இடையியல்.

### 3.4.2.7. அடிச்சொற்கள்

அடிச்சொற்களைப் பற்றிப் பேசுவது உரியியல். பிற்கால நிகண்டுகள், அகராதிகள் இவற்றிற்கு அடிப்படை இவ்வுரியியல்.

### 3.4.2.8. எச்சவியல்

சொல்லிலக்கணத்தில் சொல்லாது விட்ட செய்திகளையும் எச்சவியலில் கூறுகிறார்.

செய்யுளுக்குரிய சொற்கள், பொருள்கோள்கள், தொகைகள் போன்றவற்றின் இலக்கணமும் இவ்வியலில் உணர்த்தப்பெறுகின்றன.

### 3.5. பொருளதிகாரம்

தமிழின் உயர்நாடி, முதுகெலும்பு, பொருளதிகாரம் வேறு எந்த மொழிக்கும் இல்லாத இலக்கணம் பொருளிலக்கணம்

பொருளிலக்கணம்தான் தொல்காப்பியம் உலகப்பொது நூல் என்பதை உணர்த்துகிறது. பொருளதிகாரம் 1) அகத்திணையியல் 2)புறத்திணையியல் 3)களவியல் 4) கற்பியல் 5)பொருளியல் 6) மெய்ப்பாட்டியல் 7)உவமவியல் 8) செய்யுளியல் 9) மரபியல் என ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது.

### 3.5.1. அகத்திணை

அகம் என்பது உள்ளம், மனம், வீடு போன்ற பல பொருள்களைக் குறிக்கும். திணை ஒழுக்கத்தைக் குறிக்கும். அகத்திணை வீட்டு வாழ்க்கையைக் குறிக்கிறது. தொல்காப்பியம் பொருள்களை முதல், கரு, உரிப்பொருள் என மூன்றாகக் கூறுகிறது.

### 3.5.1. முதல்பொருள்

நிலமும் பொழுதும் முதல் பொருள். நிலமும் பொழுதும் இல்லையென்றால் செயல்கள் இல்லை, வரலாறு இல்லை. எல்லாவற்றிற்கும் அடிப்படை நிலமும் பொழுதும் தான்.

அவற்றை time, space and action என்று கூறுவர் அறிவியலார்.

### 3.5.3. நிலம்

நிலத்தை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று ஐந்தாக பகுத்துள்ளது தொல்காப்பியம். (நடுவண் ஐந்திணை-பாலை). இந்நிலப்பகுப்பு உலகம் முழுவதற்கும் பொருந்தும்.

குறிஞ்சி- உலக மலைகள் அனைத்தும்

முல்லை-உலகக் காடுகள் அனைத்தும்

நெய்தல்- உலகக் கடற்கரைகள் அனைத்தும்

மருதம்-உலக வயல்கள் அனைத்தும்

பாலை- மணல் சார்ந்த இடங்கள் அனைத்தும்(நடிவண்-desert)

### 3.5.4. காலம்

காலத்தைப் பெரும்பொழுது, சிறுபொழுது எனப் பகுத்தனர்.

பெரும்பொழுதுகள்: 1) கார் 2)கூதிர் 3)முன்பனி 4)பின்பனி 5) இளவேனில் 6) முதுவேனில்

சிறுபொழுதுகள்: 1)வைகறை 2)விடியல் 3)நண்பகல் 4) எற்பாடு 5)மாலை 6) யாமம்

ஒவ்வொரு சிறுபொழுதிற்கும் நான்கு மணிநேரம்-6*4=24-மணிநேரம் தெளிவாகப் பொருந்துகிறது.

### 3.5.5. கருப்பொருள்

கருப்பொருட்கள்: 1) தெய்வம் 2) உணவு 3) விலங்குகள் 4) மரங்கள் 5) பறவைகள் 6) தோற்கருவிகள் 7) நரம்புக்கருவிகள் 8)தொழில்

இவை நம்மைச் சுற்றி இருப்பவை. இவை சுற்றுப்புறச் சூழல் கல்வியை உருவாக்குகின்றன. இவை சிறப்பாக இருந்தால்தான் வாழ்க்கை சிறப்பாக அமையும். இப்போது உலகச் சமுதாயம் இதை உணர்கிறது. இதைக் கி.மு. வில் கூறியுள்ளது தொல்காப்பியம்.

### 3.5.6. உரிப்பொருள்

(செயல்பாடுகள்: வாழ்க்கையோடு தொடர்புடையன)

உரிப்பொருள்: 1) புணர்தல் 2) பிரிதல் 3) இருத்தல் 4) இரங்கல் 5) ஊடல்.

இவற்றின் நிமித்தமும் உரிப்பொருளாக அமையும்.

### 3.5.7. புறத்திணை

புறத்திணை நாட்டு வாழ்க்கையைப் பற்றி பேசுவதுண்டு. பழங்கால போர் வாழ்க்கையைப் பற்றியது. அகத்தை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், கைக்கிளை, பெருந்திணை என ஏழாக அமைத்து புறத்துக்கு வெட்சி ( கரந்தை), வஞ்சி, உழிஞை ( நொச்சி) தும்பை, வாகை, பாடாண், காஞ்சி என முறையே அமைத்து அகத்தையும் புறத்தையும் தொடர்புபடுத்துகிறார் தொல்காப்பியர்.

ஒருமைப்பாடு- pattern

நாட்டு வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை பற்றி செய்திகள் அனைத்தும் புறத்திணையியல் உள்ளன.

### 3.5.8. களவியல்

பிறர் அறியாமல் செய்வது களவு.

அதனோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் அனைத்தையும் களவியலில் கூறுகிறார் தொல்காப்பியம்.

**3.5.9. பண்புகள்**

**1) உலக ஆடவர் பொதுப்பண்பு**

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன" (1044) அனைத்து ஆடவர்க்கும் பெருமையும் வலிமையும்தான் சிறப்பு.

**2) உலகப் பெண்டிர்க்குரிய பண்பு**

இயல்பாகப் பொருந்தும் அச்சம், நாணம், மடம் என்று மூன்றும் உலகப்பெண்டிர்க்குரிய பண்புகள். தலைவிக்கு தோழி, செவிலி போன்றோரின் துணை இவ்வியலில் கூறுகிறது. களவுக்காலம் முடிந்தவுடன் கற்புக்காலம் ஆரம்பிக்கிறது. திருமணம் ஆனவுடன் கற்பு தொடங்குகிறது.

**களவு, கற்பு**

தலைவிக்கு தோழி செவிலியுடைய துணை உள்ளது. களவுக் காலம் முடிந்தவுடன் கற்புக் காலம் தொடங்குகிறது.

திருமணம் ஆனவுடன் கற்புக் காலம் தொடங்குகிறது. பழங்காலத்தில் திருமண நிகழ்ச்சிகள் மிகவும் குறைவு. நிகழ்ச்சி தேவைப்பட்டது.

1)கணவன், மனைவி வாழ்கின்ற வாழ்க்கை கற்பு வாழ்க்கை ஆகும்.

2)மனவேறுபாடு- ஊடல்

3)கல்விக்காக தலைவன் தலைவியைப் பிரிகின்ற மூன்று ஆண்டுகள் வரை பிரியலாம்

இவ்வாழ்க்கைக்குத் துணையாய் இருப்போர் 12 பேர்: 1)தோழி 2)தாய் 3)தோழன் 4)பார்ப்பான் 5) பாணன் 6)பாடினி 7) இளையர் 8) விருந்தினர் 9)கூத்தர் 10) விறலியர் 11) அறிவர் 12) கண்டோர்.

### 3.5.10. பொருளியல்

பொருளதிகாரத்தின் ஒழிபியல் போன்று ஏனைய (மற்ற) இயல்களில் கூறாதவற்றைப் பொருளியலில் கூறுகிறார்.

எல்லா உயிர்களும் இன்பத்தை விரும்புகிறது. இது இயற்கையின் நியதி. பெண்பாலுக்குரிய சிறப்பான பண்புகள்:

**"செறிவும், நிறையும், செம்மையும் செப்பும்,**

**அறிவும் அருமையும் பெண்பாலான"**

இறைச்சி-பழங்கால இலக்கியத்தில் கூறப்படாத உணர்த்தப்படும் உணர்ச்சி.

இலக்கியத்தின் சிறந்த வெளியீட்டுக் கொள்கை இறைச்சி என்பதாகும்.

மனைவிக்கு உயர்வு, தலைவனுக்குப் பணிவு; நுண்பொருள்கள்: கற்பு, ஏர், எழில், சாயல், நாண், வேட்கை போன்றவை.

### 3.5.11. மெய்ப்பாடு

உணர்ச்சிகளின் வெளியீடு மெய்ப்பாடு. உணர்ச்சிகளின் வெளியீடுகள்/மெய்ப்பாடுகள்: 1) நகை(சிரிப்பு)(மெய்ப்பாடுகள் எட்டு), 2)அழுகை ( அழும் செயல்), 3)இளிவரல், 4)மருட்கை, 5)அச்சம், 6)பெருமிதம், 7) வெகுளி, 8) உவகை (மகிழ்ச்சி).

### ***3.4. முடிவுரை***

எத்திசையும் புகழ் மணக்க இருந்துவரும் தமிழ் மொழி தமிழகத்தின் தாய்மொழி. தமிழகத்தைத் தவிர ஆந்திரம், கேரளம், கர்நாடகம், பாண்டிச்சேரி, அந்தமான் தீவு, மகாராஷ்டிரம், ஒரிசா, வங்காளம், டெல்லி முதலிய மாநிலங்களிலும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் குடியேறி இருக்கிறார்கள் அல்லது தங்கி இருக்கிறார்கள்.

## இயல் 4:

### ***4.0. முடிவுரை***

வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகம் என்று தமிழ்நாட்டின் எல்லையைக் குறிக்கின்றனர். அதனையே தமிழ் இலக்கிய வரலாற்றில் லெமூரியா கண்டம் என்பர். இவண் கூறப்பட்டுள்ள

குமரிமுனையினைக் கடல் கொண்டது. உலகின் மூத்த மொழியாக விளங்குகின்ற தமிழின் பழமையை மண்தோன்றாக் காலத்தேயே தோன்றியது என்பது புறப்பொருள் வெண்பா மாலை. "வானம் அளந்ததனைத்தும் அளந்திடும் வன்மொழி" என்று பாரதியால் போற்றப்பட்ட தமிழ்மொழி மனிதன் முதன்முதலில் பேசிய பழம்பெருமொழிகளில் ஒன்றாகும்.

கற்றறிந்த புலவர்களையும், சான்றோரையும் போற்றிப் பாரட்டுவது பண்டைத் தமிழ் அரசர்களின் பணியாக இருந்தது. கற்றறிந்த புலவர்கள், அரசர்களாக, குறுநில மன்னர்களாக, பொது மக்களாக விளங்கினர். ஆண்டி முதல் அரசன் வரை, ஆண்பாற்புலவர்களோடு பெண்பாற்புலவர்களும் சிறப்புடன் வாழ்ந்தனர் என்பதை அறிகிறோம். அரசர்கள் புலவர்களைப் பெரிதும் போற்றினர் என்பதைச் சங்கப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

"கதநபம எனும் ஆவைந்தெழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே"
"சகரக் கிளவியும் அவற்றோரற்றே
அஐஔ எனும் மூன்றங் கடையே"

எனவரும் நூற்பாக்களில் 'சகரம்' மொழிக்கு முதல் வாரா என்று கூறுவதால் 'சங்கம்' என்ற சொல் தமிழ்ச் சொல் அன்று என்று கருதுகின்றனர். 'சங்கம்' என்ற சொல் இல்லையாயினும் அவைக் கழகம், கூட்டம் என்ற சொற்கள் சங்கம் என்ற பொருளில் வழங்கியிருந்தன என்பதை உணர்கிறோம்.

***புத்தகக் கட்டத் தளங்கள்***


இயல் 1: 1) டாக்டர் ஆ. இராமகிருட்டினன்-தமிழக வரலாறும், தமிழின் பண்பாடும்-பக்கம் 7

2) சென்னை பதிப்பகம், பாரதியார் பாடல்கள், பக்கம் 47.

இயல் 2: 1) கலிங்கத்துப் பரணி- சிறைப்பட்ட பெண்களின் பக்கம், பாண்டியர் பக்கம், சென்னை பதிப்பகம்.

2) 21st Century Science, **பக்கம்** 94, **பத்தி** 1- Cambridge CIE Book

இயல் 3: 1) en.m.wikipedia.org/wikipedia-Tholkappiyam

2) நல்ல தமிழ் எழுத வேண்டுமா? அ.கி.பரந்தாமனார்-எம்.ஏ.